**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 20/2023**

**வா.சா.1 – பாபு**

**<u>24–01–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 8 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. நான் திருப்பூர் மாவட்டம் பொங்குபாளையம் கிராமம் பள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆதார் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்து வருகிறேனா என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருந்து வந்ததாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆதார் அடையாள அட்டையில் உள்ள முகவரியில் எத்தனை ஆண்டு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 18 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் வீட்டின் உரிமையாளரின் பெயர் என்னவென்றால் தற்போது குடியிருக்கிற வீட்டின் உரிமையாளரின் பெயர் குழந்தைசாமி. ஆதார் கார்டில் சொல்லியுள்ள வீட்டின் முகவரியின் உரிமையாளர் பெயர் ஜோசப்.

2. நான் குடியிருக்கும் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் சுமார் ¾ km தூரம் இருக்கும் என்றால் சரிதான். தற்போது நான் ஆதார் கார்டில் உள்ள முகவரியில் குடியிருக்கவில்லை. தாவாவில் ஆதார் கார்டில் உள்ள முகவரியில் குடியிருந்து வருவதாக நான் சொல்லி இருந்தால் அது பொய் என்றால் 2022 ஆம் ஆண்டு அங்கிருந்து காலி செய்து விட்டேன். தற்போது நான் குடியிருந்து வரும் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். ஜோசப் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஜோசப் இவ்வழக்கின் 1ம் வாதி என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடம் என்றால் தற்போது காலி இடமாக உள்ளது. ஜோசப் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் சென்னையை சேர்ந்தவர் சென்னையில் அவரது முகவரி என்னவென்றால் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியை சேர்ந்தவர். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் சர்ஃச் பாதர் ஆக உள்ளார். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் சர்ஃச் பாதராக உள்ளேன். ஜோசப்பின் குடும்பம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான்.

3. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 2006 முதல் 2016ம் வரை தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2016 ஆம் ஆண்டு தாவா சொத்தை 1ம் தேதி ஜோசப் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஜோசப்பின் கிரைய பத்திரமான வா.சா.ஆ.12ல் ஜோசப் காலியிடமாக தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவிலும் தாவா சொத்தை காலி இடம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா விபரங்கள் நான் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.12ல் வீட்டு வரி எண், சொத்து வரி எண், மின்கட்டண எண் ஆகியவற்றை குறிப்பிடவில்லை என்றால் கிரைய பத்திரத்தில் குறிப்பிடவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் கிரைய பத்திரத்தில் அதனை குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்து இன்றுவரை காலியாக தான் இருந்தது என்றும் நான் வழக்கிற்காக தாவா சொத்தில் கட்டிடம் இருந்ததாகவும் அதற்கு வீட்டு வரி, மின் இணைப்பு இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தின் சைட் நம்பர் ஞாபகம் இல்லை. தாவா சொத்து குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். குடியிருப்பு பகுதியில் குடியிருப்பதற்கான வீடுகள் மட்டும் தான் கட்ட வேண்டும் என்ற விதிமுறை உள்ளது எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை, அது பற்றி விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து குடியிருப்பு பகுதி என்பதால் அனுமதி இல்லாமல் அங்கு சர்ஃச் கட்ட வேண்டும் என்று நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஜெபம் செய்வதற்காக ஜெப வீடு கட்டுகிறோம். சர்ஃசோ அல்லது வேறு வழிபாட்டு தலங்களோ தாவா சொத்தில் கட்ட வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி வாங்கி தான் கட்ட முடியும் என்றால் நாங்கள் சர்ஃச் கட்டவில்லை ஜெப வீடு தான் கட்டுகிறோம். நாங்கள் வழிபாடு செய்வதற்காக தான் அதனை கட்டுகிறோம் என்றால் அதில் குடியிருந்து கொண்டு எங்களை தேடி வருபவர்களுக்காக பிரார்த்தனை செய்வதற்காக கட்டுகிறோம். அவ்வாறு செய்வதற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெரிய ஆலயம் கட்டுவதற்கு தான் அனுமதி வாங்க வேண்டும், இவ்வாறு சிறிய அளவில் பண்ணுவதற்கு அனுமதி வாங்க அவசியமில்லை. முறைப்படி டிரஸ்டின் அடிப்படையில் செய்து வருகிறோம். ஜெப வீட்டிற்கு நான் அனுமதி வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை.

5. ஜெப வீடு நடத்துவதற்கு நான் இதுவரை எந்த அனுமதியும் வாங்காமல் சட்டத்திற்கு புறம்பாக தற்போது நடத்துவதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 8 வருடமாக அங்கு நடத்தி வருகிறோம் அதனால் அனுமதி வாங்க வேண்டும் என்பது ஞாபகம் இல்லை. நாங்கள் தாவா சொத்தில் சர்ஃச் கட்ட முற்பட்டபோது அப்பகுதி மக்களால் ஆட்சேயபனை செய்யப்பட்டது என்றால் சர்ஃச்சை நாங்கள் கட்டவில்லை. பிரச்சனை ஆனதா என்றால் பிரச்சனை ஆனது. அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் இருந்து விசாரணை செய்வதற்கு நேரில் ஆஜராக கோரி அழைப்பானை வந்ததா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து அழைப்பாணை வரவில்லை ஆர்.டி.ஓ விடம் இருந்து வந்தது. அந்த விசாரணையில் இது குடியிருப்பு பகுதி என்பதால் சர்ஃச் கட்டக் கூடாது என்று குறிப்பிட்டு விசாரணை முடித்து வைத்தார்கள் என்றால் விசாரணை செய்து ஆர்.டி.ஓ யாருக்கும் எந்த இடையூறும் இல்லாமல் செய்து கொள்ளலாம் என்று அனுப்பினார். அந்த பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் தொடர்பில்லை.

6. ஆர்.டி.ஓ உத்தரவு பிறப்பித்தாரா என்றால் வாய்மொழியாக தான் பேசினார். அங்கு சர்ஃச் கட்டி மத கலவரம் செய்யக்கூடாது என்று ஆர்.டி.ஓ அதனை தடுத்து நிறுத்த சொல்லியுள்ளார் என்றும் அதனை மறைத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆர்.டி.ஓ எந்த உத்தரவும் அது குறித்து கொடுக்கவில்லை. அதன் பிறகு திருமுருகன் பூண்டி பகுதியைச் சேர்ந்த மக்கள் மதமாற்றம் செய்து இடையூறு செய்வதாக எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் திருமுருகன் பூண்டிக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை புகார் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகாரில் மதமாற்றம் செய்யக்கூடாது சர்ஃச் கட்டக்கூடாது என்று பேசி அனுப்பி வைத்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் சர்ஃச் கட்டுவது குறித்து எந்த உத்தரவும் எங்களுக்கு சொல்லவில்லை. மதமாற்றம் செய்யவில்லை என்று நாங்கள் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தாவா சொத்து தற்போது வரை காலி இடமாக தான் உள்ளது என்றால் தற்போது அது காலி இடமாக உள்ளது. ஜோசப் பின் மூலப்பத்திரத்திலும் தாவா சொத்து காலியிடமாக தான் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 முதல் 7 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு சமயத்தில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் அதற்கு முன்பு உள்ள ஆவணங்களும் உள்ளது வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன்.

7. இதுவரை நான் சொல்லும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து குடியிருப்பு பகுதி என்பதால் அங்கு சர்ஃச் கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகள் உடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றும் ஆகையால் சாட்சி சொல்வதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. ஜோசப் இடம் இருந்து 15 வருடங்களுக்கு இடத்தை குத்தகைக்கு வாங்கியுள்ளோம் அந்த குத்தகத்தகையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. குத்தகை பத்திரம் எதுவும் எனக்கு எழுதி தரப்படவில்லை என்றும் பொய்யாக அவ்வாறு எழுதி கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரைகியிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ 1 ஆம் வாதி குத்தகை பத்திரம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் அங்கு இருக்கிறேன் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் சர்ஃச் கட்டி மத கலவரத்தையும் மதமாற்றத்தையும் செய்ய முயற்சி செய்வதால் நான் தாக்கல் செய்துள்ள தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் நாங்கள் சர்ஃச் கட்டவில்லை ஜெப வீடு தான் கட்டுகிறோம் மத கலவரத்தை ஏற்படுத்தவில்லை. குடியிருப்பு வீட்டைத் தவிர வேறு எந்த வகையான வீடு கட்டினாலும் முறையாக அனுமதி வாங்கி தான் கட்ட இயலும் என்றும் நாங்கள் அவ்வாறு அனுமதி இன்றி செயல்படுகிறோம் என்றால் முறையாக நாங்கள் செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

8. வா.சா.ஆ.14 புகைப்படங்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் பொய்யாக மேற்படி புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஜோசப்பை விசாரிக்கப் போகிரோமா என்றால் நீதிமன்றம் அனுமதி கொடுத்தால் விசாரிப்போம். நாங்கள் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்ய முடிவு செய்துள்ளோமா என்றால் தேவை ஏற்பட்டால் விசாரிப்போம். பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கத்தோடு சட்டத்திற்கு புறம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் அனுமதி பெற்று கட்டிடம் கட்டுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.